சுருக்கம்

பொது சுகாதாரம் – பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககத்திற்கு புதிதாக கட்டப்பட்ட கட்டிடத்திலுள்ள இரு மின் தூக்கிகளை இயக்க இரண்டு மின் தூக்கி இயக்குபவர் பணியிடங்கள் உருவாக்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏபி 2) துறை

அரசாணை (நிலை) எண்.297

நாள்: 24.08.2017
திருவள்ளுவர் ஆண்டு 2048
ஹேவிளம்பி, ஆவணி – 8

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண். 839, சுகாதாரம், நாள் 15.05.1979.
2. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை, இயக்குநரின் ந.க. எண் 064915/ ப.தொ.3/இரு3/2016, நாள் 20.11.2016.

----

ஆணை:

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை, இயக்ககத்திற்கென புதிதாக கட்டப்பட்ட கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ள இரண்டு மின் தூக்கிகளை இயக்கி பராமரிக்க, இரண்டு மின் தூக்கி இயக்குபவர்கள் நியமனம் செய்யப்பட வேண்டியது அவசியம் எனவும், இதன்பொருட்டு மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணைப்படி நிரந்தரமாக்கப்பட்டு காலியாகவுள்ள ரூ 4,800 – 10,000 + தர ஊதியம் ரூ 1300/– என்ற ஊ.திய விகிதத்திலுள்ள ஒரு “சமைப்பவர்” (Cook) மற்றும் ஒரு “சுத்தம் செய்பவர்” (Cleaner) பணியிடங்களை ஒப்படைப்பு செய்து, அதற்குப் பதிலாக புதிதாக இரண்டு “மின்தூக்கி இயக்குபவர்” (Lift Operator) பணியிடங்களை ரூ 4800 + 10000 + தர ஊ.தியம் ரூ 1400/– என்னும் ஊதிய விகிதத்தில் தோற்றுவித்து ஆணை வழங்குமாறு மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துணை இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து ஏற்றுக் கொண்டு, மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் நிரந்தரமாக்கப்பட்டு காலிப் பணியிடமாகவே நீடிக்கும் ஒரு சமைப்பவர் (Cook) மற்றும் ஒரு சுத்தம் செய்பவர் (Cleaner) (ஊதிய விகிதம் ரூ 4800 – 10000 + தர ஊதியம் (ரூ 1300/–) ஆகிய இரண்டு பணியிடங்களைளை ஒப்படைப்பு செய்து, அதற்கு ஈடாக பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்ககத்திற்கென கட்டப்பட்ட புதிய கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ள இரண்டு மின் தூக்கிகளை இயக்குவதற்கும், பராமரிப்பதற்கும் இரண்டு மின் தூக்கி இயக்குபவர்களை ரூ. 4800–10000 + தர ஊதியம் ரூ 1400/– என்னும் ஊதிய விகிதத்தில் நியமனம் செய்திட ஏதுவாக இரண்டு மின் தூக்கி இயக்குபவர் (Lift Operator) பணியிடங்களை, புதிய நியமனங்கள் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களில் அப்பணியிடத்திற்குரிய சிறப்பு / தற்காலிக விதிகளின் காப்புரைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 அரசாணைகள் / அறிவுரைகள் கண்டிப்பாக கடைபிடிக்கப்பட்டு நியமனம் செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் அப்பணியிடங்களை நிரப்பிய நாளிலிருந்து ஓராண்டிற்கு தற்காலிகமாக தோற்றுவித்து ஆணை வெளியிடப்படுகிறது.

(த/செ/தி)

3. மேலே புதிதாக ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களுக்கான ஊதியம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

2210–மருத்துவமும் பொதுச்சுகாதாரமும் 06–பொதுச் சுகாதாரம் – 001
நெறிப்படுத்தலும் நிருவாகமும் – மாநிலச் செலவினங்கள் – AA தலைமையிட
நிருவாகம் 01 – சம்பளங்கள் (த.தொ.கு. 2210–06–001– AA –0102)

4. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களுக்கான செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2017–2018 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படுவதை எதிர்நோக்கி மேலே பத்தி எண் 2ல் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களுக்கான ஊதியத்தை பெற்று வழங்கிட இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மேலும் 2017–2018ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதயொதுக்கத்திற்கான கருத்துருவினை நிதி (சுகாதாரம்–1) துறைக்கு அனுப்பும் பொழுது இத்தொகையினையும் தவறாது சேர்த்தனுப்புமாறு இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை, நிதித்துறையின் ஒப்புதலுடன் அதன் கோ.எண் 41796/ சுகாதாரம்–1/2017, நாள் 21.08.2017 மற்றும் அ.சா.கு. எண் 44080/மை.ம.ஆ.பி, நாள் 22.8.2017 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 1236 வுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.ராதாகிருஷ்ணன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்,
இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை, சென்னை–9.
மாநிலக் கணக்குத்தலைவர், சென்னை–18.
சம்பளம் (மற்றும்) கணக்கு அலுவலர், (தெற்கு) சென்னை–35.
நகல்
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் சிறப்பு
நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (சுகாதாரம் – I / வ. செ. பொ II / மை.ம.ஆ.பி) துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை, சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தகவு பிரிவு) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/ உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்